
# திராவிடத்தால் வாழ்கிறோம்

828

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

119

# வள்ளுவர் சிலை கண்ணாடிப் பாலம்!

## வியக்கத்தக்க வெள்ளிவிழா சாதனை!



**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

*தமிழ்நாட்டின் சுற்றுலாதலங்களில் தனிச்சிறப்புமிக்கது குமரிமுனை. ஆழ்கடலுக்கு அப்பால் தங்கத்தால் வேயப்பட்ட நெருப்புப் பந்து போல மேலெழும்பும் சூரிய உதயமும், அந்த உதய சூரியனை சின்னமாகக் கொண்ட கழக அரசின் ஒப்பீடற்ற சாதனையாக வானுயுர்ந்து நிற்கும் தாய்த்தமிழின் பெருமைமிகு அடையாளமான வள்ளுவரையும் ஒருசேர பார்க்கக்கூடிய இடம் குமரி முனை.*

*2000-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர், குமரிக்கடல் நடுவே 133 அடியில் நிறுவிய வான்புகழ் வள்ளுவர் சிலையைப் பார்வையிட 'பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக'த்தால் படகுப் போக்குவரத்து நடைபெற்றாலும், கடற்சீற்றம் அதிகமாக இருக்கும் காலங்களில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு வந்தது. அருகில் இருக்கும், 'விவேகானந்தர் நினைவிடம்' அமைந்திருக்கும் பாறையோடு ஒப்பிட்டால், திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறை உயரம் குறைவானது என்பதால், கடல் கொந்தளிப்பாக இருக்கும் சமயங்களிலும், நீர்மட்டம் குறைவாக இருக்கும்போதும் திருவள்ளுவர் சிலைக்குப் சுற்றுலா கப்பல் இயக்க முடியாது. இதனால், சுற்றுலாப் பயணிகள் அடையும் ஏமாற்றத்தைத் தவிர்க்க, வள்ளுவர் சிலையையும் விவேகானந்தர் பாறையையும் இணைக்க முடிவெடுத்து 'திராவிட மாடல் அரசு' அமைத்ததே கண்ணாடிப் பாலம்.*

### வள்ளுவர் சிலை வெள்ளி விழா

*2000-ஆம் ஆண்டு ஜனவரி ஒன்றாம் தேதி அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலைக்கு, 2025-ஆம் ஆண்டு வெள்ளிவிழா. அதையொட்டி, 2024 -ஆம் ஆண்டு டிசம்பர் 30 முதல் 2025-ஆம் ஆண்டு ஜனவரி 21 வரை தமிழ்நாடு அரசு சார்பாகக் கொண்டாடப்பட்டது. கொண்டாட்டத்தின் முதல் நாளான டிசம்பர் 30 அன்று, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கண்ணாடிப்பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார். இந்தியாவிலேயே கடலுக்கு நடுவில் அமைக்கப்பட்ட முதல் கண்ணாடிப் பாலம் இதுவாகும். இதனுடன் சேர்த்து திருக்குறள் நெறி பரப்பும் 22 தகைமையாளர்களுக்குச் சிறப்புப் பரிசு-சான்றிதழ், 'திருக்குறளால் அதிக நன்மை தனிநபருக்கே, சமுதாயத்திற்கே' என்ற தலைப்பில், சுகி சிவம் தலைமையில் பட்டிமன்றம் ஆகியவையும் நடைபெற்றன.*

*இரண்டாவது நாளில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா சிறப்பு மலர் வெளியிடப்பட்டு, திருக்குறள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ- மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. 'நாதஸ்வரக் கலைஞர் லிடியனின் திருக்குறள் இசை நிகழ்ச்சி', 'திருக்குறள் பெருமைகளை எடுத்துச் சொல்லும் கருத்தரங்கம்', 'ஓவியக் கண்காட்சி' என பிரமாண்டமாக நடைபெற்ற வள்ளுவர் சிலை வெள்ளி விழா கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக திறக்கப்பட்ட கண்ணாடிப் பாலத்தில் நடந்து சென்று கடல் அலைகளைக் கண்டு ரசித்தவாறு, கழக அரசின் சாதனைப் பாலத்தின் மீது கம்பீரமாக நடந்தார் திராவிட மாடல் நாயகர்.*



### கண்ணாடிப் பாலம் உருவான வரலாறு

*கண்ணாடி இழைப் பாலம் அமைக்க ஒன்றிய சுற்றுலாத் துறை 2016-ஆம் ஆண்டே ஒப்புதல் வழங்கிய நிலையிலும், அதனை மேற்கொள்ள அன்றைய அ.தி.மு.க. அரசு தயாராக இல்லை. மாநில அரசின் பல துறைகள் ஆய்வு நடத்தி, அதனை 2020-ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைத்துறை வசம் ஒப்படைத்தது. அதன்பிறகும் திட்டம் கிடப்பில் இருந்த நிலையில்தான், திராவிட மாடல் அரசு அமைந்தது. திராவிட மாடல் நாயகர் தலைமையில், நெடுஞ்சாலைத்துறையின் ஆய்வுக்கூட்டம் நடந்தபோது, இத்திட்டம் ஏன் இத்தனை ஆண்டுகளாக கிடப்பில் உள்ளது என்ற வினாவை எழுப்பினார்.*

*அதற்கு நெடுஞ்சாலைத்துறை சார்பில், அளிக்கப்பட்ட விளக்கங்களைக் கேட்டுக் கொண்ட முதலமைச்சர், 'முயற்சி திருவினை ஆக்கும், எண்ணித் துணிக கருமம்' என்று கட்டளையிட்டார். நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பாக 37 கோடி ரூபாய் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் வைப்பு நிதிப் பணியாக தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது. பாலக் கட்டுமான வடிவமைப்புக்கு, சென்னை-இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் கடல்சார் பொறியியல் பிரிவின் ஒப்புதலும், கடலோர ஒழுங்குமுறை மண்டல ஆணையத்தின் அனுமதியும் பெறப்பட்டு, பாலம் கட்டி முடிக்கப்பட்டது.*

> "இந்தப் பாலம் ஒரு தனித்துவம் மிக்கப் பாலம். கடலின் மீது கட்டப்பட்டதால் தூண்கள் ஏதும் அமைக்கப்படாமல், இரு பாறைகளையும் இணைக்கும் வகையில் ஒரு வளைவு (arch) அமைக்கப்பட்டு, அந்த வளைவிலிருந்து வரும் கம்பிகள் பாலத்தைத் தாங்கும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பாலத்தின் பகுதிகள் தனித்தனியாக புதுச்சேரியில் தயாரிக்கப்பட்டு, கன்னியாகுமரிக்கு எடுத்து வந்து பொருத்தப்பட்டன. இதில் உள்ள கண்ணாடி உறுதியாக்கப்பட்ட கண்ணாடி (Toughened Glass) வகையைச் சேர்ந்தது. இது 53 மில்லி மீட்டர் தடிமனானது. ஆகவே இது ஒருபோதும் உடையாது".
>
> **-டேவிட் ஆர்.ஞானசுவாமி, ஆர்க்கிடெக்ட், எம்.ஐ.ஏ. டிசைன்ஸ்.**

### பாலத்தின் சிறப்புகள்

*கடல் மட்டத்திலிருந்து 7 மீட்டர் உயரத்தில், 77 மீட்டர் நீளமும் 10 மீட்டர் அகலமும் கொண்டதாக பாலம் அமைக்கப்பட்டுள்ளது.* **'போவ் ஸ்ட்ரிங் ஆர்க்'** *(BOWSTRING ARCH) எனச் சொல்லப்படும் இந்த வளைவு வடிவப் பாலம் கடல் அரிப்பு, கடல் காற்றின் வேகம் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு வலிமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்திற்கான வளைவு 11 மீட்டர் உயரம் கொண்டது. எனவே, பாலத்தின் மீது நடந்து செல்பவர்கள் அதன் வழியாக கீழே கடலைப் பார்க்க முடியும். பாலத்தின் மையப்பகுதியில் 2.5 மீட்டர் அகலமுடைய கண்ணாடி அடித்தளம் கொண்ட நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. அதன் இருபுறமும் மேல்தள கான்கிரீட் நடைபாதை அமைக்கப் பட்டுள்ளது. அதில் கிரானைட் கற்கள் மற்றும் ஒளியூட்டும் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.*

### சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பாலம்

*சர்வதேச சுற்றுலாதலமான கன்னியாகுமரிக்கு வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், பிற மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அவர்களுக்கு இந்தக் கண்ணாடி இழைப்பாலம் புதிய அனுபவத்தைத் தருகிறது. கண்ணாடி இழைப்பாலம் வழியாக நடந்து சென்று, கடலின் அழகினைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றனர். குறிப்பாக பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவியர்களை அதிகம் கவருகிறது இந்தக் கண்ணாடி இழைப்பாலம். ஜனவரி மாதத்தில் 2 லட்சத்து 15,000 சுற்றுலாப் பயணிகள் இந்தப் பாலத்தில் நடந்து சென்று அதன் அழகை ரசித்தனர். இந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து, மார்ச் மாதத்தில் 6.35 லட்சம் பேராக அதிகரித்தது. ஏப்ரல் மாதத்தின் கடைசி 10 நாட்களில் ஒரு லட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர். குமரி சுற்றுலாவை உலகத் தரத்துக்கு உயர்த்திவிட்டது திராவிட மாடல் அரசு.*

**...சாதனை தொடரும்**

## மத வெறுப்பு தமிழ்நாட்டில் எடுபடாது!

பகல்ஹாமில் தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டு, இரு வாரங்கள் ஆகிவிட்டன. தீவிரவாதிகளை அடையாளம் காணவோ, அவர்களைக் கைது செய்யவோ ஒன்றிய உள்துறை அமைச்சகம் இதுவரை ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எதையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித் ஷா பதவி விலக வேண்டுமென்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. 'அமித் ஷாவைப் பதவி விலகச் சொல்வது அரசியல்' என்கிற பாரதிய ஜனதா கட்சி.

ஆனால், 'பல மாநிலங்களில் காஷ்மீர் மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள், ராகுல் காந்தி வெளிநாடு செல்லும்போதுதான் தாக்குதல் நடக்கிறது' என்று அவதூறு பரப்புகிறது பாரதிய ஜனதா கட்சி. காஷ்மீரில் புல்டோசர் கொண்டு இஸ்லாமியர்களின் வீடுகள் இடிக்கப்படுகின்றன. பாகிஸ்தான் நடிகர்கள், கிரிக்கெட் வீரர்களின் சமூக வலைத்தளப் பக்கங்கள் முடக்கப்படுகின்றன. சிகிச்சைக்காக இந்தியா வந்த பாகிஸ்தானியர்கள்கூட வெளியேற வேண்டுமென்று நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தத்தில் தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பதைத் தவிர, மற்ற நடவடிக்கைகளில் மட்டும்தான் கவனம் செலுத்துகிறது ஒன்றிய அரசு.

இஸ்லாமியர்கள் மீதான மத வெறுப்பை உமிழ்வது மட்டும்தான் பா.ஜ.க.வினரின் நோக்கமாக உள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு பா.ஜ.க. சார்பில் பகல்ஹாம் தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் அறிவித்துள்ளது. நடவடிக்கை எடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். மத வெறுப்புப் பேச்சுக்களோ, நடவடிக்கைகளோ, தமிழ்நாட்டில் ஒருபோதும் தாக்கத்தை ஏற்படுத்தாது. சில நாட்களுக்கு முன்பு, மதுரை சித்திரைத் திருவிழாவின் நான்காம் நாளில், வீதி உலா நிகழ்ச்சியின்போது, தெற்குவாசல் வழியில் இருக்கும் முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் சார்பில், பக்தர்களுக்குக் குளிர்பானங்கள் இனிப்புகள் வழங்கி மகிழ்ந்துள்ளனர். மத வேறுபாடுகள் இன்றி, மக்கள் ஒற்றுமையாக அன்பு பாராட்டும் மாநிலம்தான் தமிழ்நாடு! அதை அவர்களால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது. இந்த ஒற்றுமைதான் இந்தியா முழுவதும் பரவ வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### கல்லூரி மாணவராக தளபதிக்குப் பொன்னாடை!



பி.லீனஸ் ராஜ்

1994 -ஆம் ஆண்டு, கன்னியாகுமரியில் கழக இளைஞர் அணி மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.கனி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார். அன்றைக்கு கல்லூரி மாணவர் அணி அமைப்பாளராக இருந்த நான் தளபதி அவர்களைச் சந்தித்துப் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தேன்.

**– பி.லீனஸ் ராஜ், பி.காம். பி.எல்,**
**மாவட்ட அரசுக் குற்றவியல் வழக்கறிஞர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கழகம் உருவு

### திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம்!

1951-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதி, திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகத்தின் தொடக்க விழா நடைபெற்றது. ஏராளமான தாய்மார்களும், கல்லூரி மாணவிகளும் கலந்துகொண்டனர். அலமேலு அப்பாதுரை, கழகம் தொடங்கியதற்கான காரணங்களை விளக்கினார். ஆதிலட்சுமி அம்மையார், தலைமை வகிக்க, டாக்டர் தருமாம்பாள் அம்மையார் கொடியேற்றினார்கள்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131